www.surabooks.com
www.Padasalai.Net www.Trb Tnpsc.com

11 ஆம் வகுப்பு

# அரசு பொதுத்தேர்வு மார்ச் – 2024

PART - III

# பொருளியல் (விடைகளுடன்)

பதிவு எண்

கால அளவு : 3.00 மணி நேரம் ] [ மொத்த மதிப்பெண்கள்: 90

**அறிவுரைகள்:** (1) அனைத்து வினாக்களும் சரியாக பதிவாகி உள்ளதா என்பதனை சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின், அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

(2) **நீலம்** அல்லது **கருப்பு** மையினை மட்டுமே எழுதுவதற்கும், அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும். படங்கள் வரைவதற்கு பென்சில் பயன்படுத்தவும்.

## பகுதி - I

**குறிப்பு :** (i) **அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்கவும். **20 × 1 = 20**

(ii) கொடுக்கப்பட்டுள்ள நான்கு மாற்று விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.

**1.** முடிக்கப்பட்ட வேலையின் அளவின் அடிப்படையில் வழங்கப்படும் கூலி ________.

(அ) துண்டுக்கூலி (ஆ) பெயரளவுக் கூலி
(இ) நேரக் கூலி (ஈ) உண்மைக் கூலி

**2.** MUDRA வங்கி செயல்படுத்தப்பட்ட ஆண்டைக் கண்டறிக.

(அ) 2010 (ஆ) 2000
(இ) 2015 (ஈ) 2005

**3.** திட்டக்குழு என்பதற்கு மாற்றாக ________ என்னும் அமைப்பு 2015-ம் ஆண்டு ஜனவரி 1-ஆம் நாள் ஏற்படுத்தப்பட்டது.

(அ) சட்டக் குழு
(ஆ) நிதி ஆயோக்
(இ) மனித உரிமை ஆணையம்
(ஈ) நிதிக் குழு

**4.** "மனிதனுடைய வாழ்க்கையின் அன்றாட நடவடிக்கைகளைப் பற்றி பொருளியல் ஆராய்கிறது" என்று கூறியவர் :

(அ) ஆல்ஃபிரட் மார்ஷல்
(ஆ) ஆடம் ஸ்மித்
(இ) சாமுவேல்சன்
(ஈ) இலயனல் ராபின்ஸ்

**5.** ஒரு நிறுவனத்தின் உள்ளீடு, வெளியீடுகளுக்கு இடையே உள்ள இயல்பான தொடர்பை தருவது ________ என அழைக்கப்படுகிறது.

(அ) சேமிப்பு சார்பு (ஆ) நுகர்வு சார்பு
(இ) முதலீட்டு சார்பு (ஈ) உற்பத்தி சார்பு

**6.** பண்டங்கள் மற்றும் பணிகள் வரி என்பது ________.

(அ) மதிப்பு கூட்டப்பட்ட வரி போன்றது
(ஆ) பலமுனை வரி
(இ) ஒருமுனை வரி, அடுக்கு விளைவுகளற்றது
(ஈ) அடுக்கு விளைவுகளைக் கொண்டது

**7.** மொத்த மாறாச் செலவு 1,000, மொத்த மாறும் செலவு 200 எனில் மொத்தச் செலவைக் கணக்கிடுக.

(அ) 500 (ஆ) 800
(இ) 20,000 (ஈ) 1,200

**8.** 'போலி வாரம்' என்ற கருத்து ________ உடன் தொடர்புடையது.

(அ) வாக்கர் (ஆ) ரிக்கார்டோ
(இ) மார்ஷல் (ஈ) கீன்ஸ்

**9.** பத்தாம் ஐந்தாண்டுத் திட்ட காலம் :

(அ) 2007 - 2012 (ஆ) 1992 - 1997
(இ) 1997 - 2002 (ஈ) 2002 - 2007

**10.** சிமெண்ட் உற்பத்தியில் தமிழ்நாடு இந்திய அளவில் ________ நிலையில் உள்ளது.

(அ) முதல் (ஆ) மூன்றாம்
(இ) இரண்டாம் (ஈ) நான்காம்

**11.** நீண்டகால சராசரி செலவுக்கோடு ________ கோடு எனவும் அழைக்கப்படுகிறது.

(அ) உற்பத்தி (ஆ) தேவைக்
(இ) விற்பனை (ஈ) திட்ட



kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com
enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000

www.surabooks.com
www.Padasalai.Net www.Trb Tnpsc.com


12. $(y - y_1) = m(x - x_1)$ என்பது ________ குறிக்கும்.

(அ) மாறிலியை (ஆ) சாய்வை

(இ) வளைகோட்டை (ஈ) நேர்கோட்டை

13. பொருத்தி விடை தேர்க :

| | | | |
|---|---|---|---|
| (1) | நீலப் புரட்சி | (i) | எண்ணெய் வித்துக்கள் |
| (2) | மஞ்சள் புரட்சி | (ii) | இறால் |
| (3) | சாம்பல் புரட்சி | (iii) | மீன் |
| (4) | இளஞ்சிவப்புப் புரட்சி | (iv) | உரங்கள் |

(அ) (1)-(iii), (2)-(i), (3)-(iv), (4)-(ii)

(ஆ)(1)-(iii), (2)-(iv), (3)-(i), (4)-(ii)

(இ) (1)-(iv), (2)-(iii), (3)-(ii), (4)-(i)

(ஈ) (1)-(ii), (2)-(i), (3)-(iv), (4)-(iii)

14. பற்றாக்குறைப் பொருளாதார இலக்கணத்தின் ஆசிரியர் யார்?

(அ) இராபின்ஸ் (ஆ) ஆடம் ஸ்மித்

(இ) ராபர்ட்சன் (ஈ) மார்ஷல்

15. எந்த வகை அங்காடியில் போட்டியே இராது?

(அ) இருவர் முற்றுரிமை

(ஆ)நிறைவுப் போட்டி

(இ) சில்லோர் முற்றுரிமை (ஈ) முற்றுரிமை

16. உலகில் வலுவான பொருளாதாரங்களைக் கொண்ட நாடுகள் வரிசையில் இந்தியாவின் இடம்:

(அ) ஐந்து (ஆ) நான்கு (இ) பத்து (ஈ) ஏழு

17. முற்றுரிமையில் MR கோடு ________ கோட்டிற்கு கீழிருக்கும்.

(அ) AR (ஆ) TR (இ) AC (ஈ) MC

18. சராசரி உற்பத்தி (AP)-யைக் கணக்கிட பயன்படும் சூத்திரம் ________.

(அ) TP / MP (ஆ) $\Delta$TP / N

(இ) TP / N (ஈ) $\Delta$TP / $\Delta$N

19. பொருளாதாரத்திற்கான நோபல் பரிசை அமர்த்தியா குமார் சென் பெற்ற ஆண்டு :

(அ) 2008 (ஆ) 1998 (இ) 2010 (ஈ) 2000

20. இறுதிநிலைப் பயன்பாடு சுழியமாக இருக்கும் போது மொத்தப் பயன்பாடு ________ நிலையை அடைகிறது.

(அ) சுழியமான (ஆ) குறைவான

(இ) எதிர்மறையான (ஈ) உச்சமான

## பகுதி - II

**குறிப்பு : எவையேனும் ஏழு** வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் 30 **-க்கு கட்டாயமாக விடையளிக்கவும்.**

**[7 × 2 = 14]**

21. உற்பத்திக் காரணிகளை வகைப்படுத்துக.

22. பகிர்வு என்றால் என்ன?

23. மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தி (GSDP) – வரையறுக்கவும்.

24. இந்தியப் பொருளாதாரத்தின் ஏதேனும் ஒரு இயல்பினைக் கூறுக.

25. LPG கொள்கையைச் செயல்படுத்தக் காரணம் என்ன?

26. வெளிப்படையானச் செலவுகள் என்றால் என்ன?

27. மனித மேம்பாட்டுக் குறியீட்டெண் (HDI) மற்றும் வாழ்க்கைத் தரக் குறியீட்டெண் (PQLI) ஆகியவற்றை வேறுபடுத்துக.

28. விருப்பங்களை வகைப்படுத்தி எழுதுக.

29. நுண்ணியல் பொருளியலை வரையறுக்கவும்.

30. போட்டியின் அடிப்படையில் அங்காடியை வகைப்படுத்துக.

## பகுதி - III

**குறிப்பு : எவையேனும் ஏழு** வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் 40**-க்கு கட்டாயமாக** விடையளிக்கவும்.

**[7 × 3 = 21]**

31. நீண்ட காலச் செலவு வளைகோட்டை தக்க வரைபடத்துடன் விவரிக்கவும்.

32. வாரம் மற்றும் போலி வாரம் – வேறுபடுத்துக.

33. கிராம சர்வோதயா பற்றி சிறு குறிப்பு எழுதுக.

34. SHG–யின் பண்புகளைக் குறிப்பிடுக.

35. பயன்பாட்டின் முக்கிய இயல்புகள் யாவை?

36. நிலத்தின் சிறப்பியல்புகள் யாவை?

37. சமநோக்கு வளைகோடுகளின் பண்புகள் யாவை?

kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com
enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000

www.surabooks.com
www.Padasalai.Net www.Trb Tnpsc.com


**38.** விற்பனை செலவு என்றால் என்ன? அதனை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

**39.** தமிழ்நாட்டின் கனிம வளங்கள் பற்றி குறிப்பு எழுதுக.

**40.** இருமுக முற்றுரிமை என்றால் என்ன?

## பகுதி - IV

**குறிப்பு : அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

**[7 × 5 = 35]**

**41.** (அ) சில்லோர் முற்றுரிமையின் பண்புகளை விளக்குக.

**(அல்லது)**

(ஆ) குறுகிய காலச் செலவுக் கோடுகளைத் தகுந்த படத்துடன் விவரிக்கவும்.

**42.** (அ) வணிக வங்கிகள் நாட்டுடமையாக்கப்பட்டதற்கான காரணங்களைக் குறிப்பிடுக.

**(அல்லது)**

(ஆ) 2015 - 2020 ஆம் ஆண்டிற்கான ஏற்றுமதி, இறக்குமதிக் கொள்கையின் சிறப்பியல்புகளை விளக்குக.

**43.** (அ) பொருளியலில் பகுத்தாய்வு மற்றும் தொகுத்தாய்வு முறைகளின் படிகளை விளக்குக.

**(அல்லது)**

(ஆ) மாறும் விகித விளைவு விதியை வரைபடத்துடன் விளக்குக.

**44.** (அ) தேவை நெகிழ்ச்சியை அளவிடும் முறைகள் யாவை?

**(அல்லது)**

(ஆ) கடன் நிதி வட்டிக் கோட்பாட்டை விளக்குக.

**45.** (அ) பி.ஆர்.அம்பேத்கர் அவர்களுடைய முக்கிய பொருளாதாரக் கருத்துகளை விளக்குக.

**(அல்லது)**

(ஆ) ரிகார்டோவின் வாரக் கோட்பாட்டை எடுத்துக்காட்டுடன் விவரிக்கவும்.

**46.** (அ) ஊரகக் கடன்களுக்கான காரணங்களை ஆராய்க.

**(அல்லது)**

(ஆ) தமிழ்நாட்டிலுள்ள பல்வேறு வகையான ஆற்றல் வளங்களை விவரிக்கவும்.

**47.** (அ) (i) கணித முறையின் பொருளாதாரப் பயன்பாடுகள் ஏதேனும் மூன்றினை எழுதுக.

(ii) ஊரகவீட்டுவசதிசிக்கலுக்கானகாரணங்களில் ஏதேனும் இரண்டினைக் கூறுக.

**(அல்லது)**

(ஆ) கிராமர் விதியைப் பயன்படுத்தி கொடுக்கப்பட்டுள்ள நேர்கோட்டுச் சமன்பாடுகளுக்குத் தீர்வு காண்க.

$$7x_1 - x_2 - x_3 = 0$$

$$10x_1 - 2x_2 + x_3 = 8$$

$$6x_1 - 3x_2 - 2x_3 = 7$$

❖ ❖ ❖

# விடைகள்

## பகுதி - I

**1.** (அ) துண்டுக் கூலி

**2.** (இ) 2015

**3.** (ஆ) நிதி ஆயோக்

**4.** (அ) ஆல்ஃபிரட் மார்ஷல்

**5.** (ஈ) உற்பத்தி சார்பு

**6.** (இ) ஒருமுனை வரி, அடுக்கு விளைவுகளற்றது

**7.** (ஈ) 1,200

**8.** (இ) மார்ஷல்

**9.** (ஈ) 2002 - 2007

**10.** (ஆ) மூன்றாம்

**11.** (ஈ) திட்ட

**12.** (ஈ) நேர்கோட்டை

**13.** (அ) (1)-(iii), (2)-(i), (3)-(iv), (4)-(ii)

**14.** (அ) இராபின்ஸ்

**15.** (ஈ) முற்றுரிமை

**16.** (ஈ) ஏழு

**17.** (அ) AR

**18.** (இ) TP / N

**19.** (ஆ) 1998

**20.** (ஈ) உச்சமான

kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com
enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000

www.surabooks.com
www.Padasalai.Net www.Trb Tnpsc.com


## பகுதி - II

**21.** உற்பத்தி காரணிகள் நான்கு வகைப்படும். அவை,

- ♦ நிலம்
- ♦ உழைப்பு
- ♦ மூலதனம் மற்றும்
- ♦ அமைப்பு அல்லது தொழில் முனைதல்.

**22.** பகிர்வு என்பது நான்கு உற்பத்திக் காரணிகளுக்கு வருவாயைப் பகிர்ந்தளிப்பதை குறிக்கும்.

**23.** மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தி என்பது ஒரு மாநிலத்தின், ஓர் ஆண்டில் உற்பத்தி செய்யப்படும் பண்டங்கள், பணிகளின் மொத்த மதிப்பாகும்.

**24.** **இந்தியப் பொருளாதாரத்தின் இயல்புகள் :**

- ♦ இந்தியா ஒரு கலப்புப் பொருளாதாரம்
- ♦ வேளாண்மை முக்கிய பங்கு வகிக்கிறது.
- ♦ வளர்ந்து வரும் சந்தை
- ♦ வளர்ந்து வரும் பொருளாதாரம்

**25.** ♦ இந்தியாவில் பொருளாதார நடவடிக்கைகளை எளிதாகத் துவங்க இயலாத அளவுக்குக் கட்டுப்பாடுகள் இருந்தன.

- ♦ அரசு உரிமைக்கொள்கைகளைச் சற்றே தளர்த்துவது அவசியமாக இருந்தது.
- ♦ பொருளாதார வளர்ச்சியில் தனியார்துறைக்குப் போதுமான வாய்ப்புகளை வழங்கப்படவில்லை என்று கருதப்பட்டதால் தனியார்மயமாதல் அவசியமானது.
- ♦ வளர்ச்சி குன்றிய நாடுகளின் உதவியின்றி வளர்ந்த நாடுகள் மேலும் வளர முடியாது. இதற்கு உலகமயமாதல் அவசியமாகிறது.

**26.** ♦ உற்பத்திக் காரணிகளை வாங்க மற்றவர்களுக்கு செலுத்தும் செலுத்துகையே வெளிப்படையான செலவு எனப்படும்.

- ♦ வெளிப்படையான செலவு என்பது கணக்கியல் செலவு (அ) வெளிச்செல்லும் செலவு (அ) பணச் செலவு என்றும் அழைக்கப்படும்.

**27.**

| வ. எண். | மனித மேம்பாட்டுக் குறியீட்டெண் (HDI) | வாழ்க்கைத் தரக்குறியீட்டெண் (PQLI) |
|---|---|---|
| 1 | ஐக்கிய நாடுகள் முன்னேற திட்டம் (UNDP) வெளியிடப்பட்டது. | ஒரு நாட்டின் வாழ்க்கைத்தரத்தினை அளவிடப் பயன்படுகிறது. |
| 2 | இது எதிர்பார்க்கப்படும் வாழ்நாள் குறியீடு, கல்விக்குறியீடு மற்றும் மொத்த உள்நாட்டு உற்பத்தி அடிப்படையில் அமைக்கப்பட்டது. | இதில் எதிர்பார்ப்பு ஆயுட்காலம், குழந்தை இறப்பு வீதம், மற்றும் எழுத்தறிவு வீதம் போன்ற மூன்று குறியீடுகளைப் பயன்படுத்தினார். |
| 3 | பாகிஸ்தானின் பொருளியில் அறிஞர் மஹபூப் உல் ஹக் என்பவரும் இந்தியாவைச் சார்ந்த அமர்த்தியா குமார் சென் என்பவரும் இக்கோட்பாட்டை மேம்படுத்தினர் | மோரிஸ் டி.மோரிஸ் என்வரால் உருவாக்கப்பட்டது. |

**28.** **விருப்பங்களின் வகைகள் மூன்று.**

♦ இன்றியமையாத விருப்பம். ♦ வசதிக்கான விருப்பம். ♦ ஆடம்பரத்திற்கான விருப்பம்.

**29.** ♦ தனிப்பட்ட மனிதர்கள், இல்லங்கள் மற்றும் நிறுவனங்கள் அல்லது தொழில்களின் பொருளாதார நடவடிக்கைகளை நுண்ணியல் பொருளியல் என்கிறோம்.

- ♦ பல்வேறுபட்ட சந்தை சூழலில் தொழில் நிறுவனங்கள், வாங்குபவர்கள், விற்பவர்கள் இணைந்து எவ்வாறு விலையைத் தீர்மானிக்கும் செயலில் ஈடுபடுகிறார்கள் என்பதை நுண்ணிய பொருளியல் தெளிவுபடுத்துகிறது.

kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com
enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000

www.surabooks.com
www.Padasalai.Net www.Trb Tnpsc.com


**30.** ♦ நிறைவுப்போட்டி அங்காடி

♦ நிறைகுறைப் போட்டி அங்காடி

இதில் முற்றுரிமை, முற்றுரிமைப் போட்டி, இருவர் முற்றுரிமை, சில்லோர் முற்றுரிமை ஆகிய அங்காடிகள் அடங்கும்


## பகுதி - III

**31.** **நீண்டகாலச் செலவுக் கோடுகள் :**

♦ நீண்டகாலத்தில் அனைத்து உற்பத்திக் காரணிகளும் மாறக் கூடியவை.

♦ நீண்டகாலத்தில் மாறாக்காரணி மற்றும் மாறாச் செலவுகள் இருக்க வாய்ப்பு இல்லை.

♦ நீண்ட கால சராசரி செலவுக் கோடுகள் (LAC) என்பது நீண்டகால மொத்தச் செலவை, மொத்த உற்பத்தி செய்யப்பட்ட அலகுகளால் வகுக்கப்படுவதால் பெறப்படும் செலவாகும்.




♦ LAC = LTC/Q

LAC= நீண்டகால சராசரிச் செலவு LTC = நீண்டகால மொத்தச் செலவு

Q = உற்பத்தி அளவு

♦ நீண்டகால சராசரிச் செலவு வளைகோடானது பல குறுகிய கால சராசரிச் செலவு வளைகோடுகளிலிருந்து பெறப்பட்டதாகும்.

♦ அதாவது குறுகியகால சராசரிச் செலவு வளைகோடுகளின் மிகத் தாழ்வான புள்ளிகளை ஒருங்கிணைத்து, நீண்ட கால சராசரிச் செலவு வளைகோடானது அமைந்துள்ளது.

♦ எனவே நீண்டகால, சராசரிச் செலவு வளைகோடானது 'திட்ட வளைகோடு' அல்லது 'உறைவடிவ வளைகோடு' என்றும் அழைக்கப்படுகிறது.

**32.**

| | வாரம் | போலிவாரம் |
|---|---|---|
| 1. | வாரம் நிலத்திற்கு வழங்கப்படுகிறது. | போலிவாரம் மனிதனால் உருவாக்கப்பட்ட கருவிகளுக்கு வழங்கப்படுகிறது. |
| 2. | நிலத்தின் அளிப்பு எப்போதும் நிலையானது. | மனிதனால் உருவாக்கப்பட்ட கருவிகள் குறுகிய காலத்தில் மட்டுமே நிலையானது. |
| 3 | வாரம் விலையில் சேரும். | போலி வாரம் விலையில் சேராது. |

kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com
enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000

www.surabooks.com
www.Padasalai.Net www.Trb Tnpsc.com


**33.** ♦ கிராம சர்வோதயா என்பது கிராமங்களின் முன்னேற்றத்தைப் பற்றிய காந்தியடிகளின் பொருளாதாரக் கருத்துகளில் முக்கியமானது.

♦ மேலும் "உண்மையான இந்தியா வாழ்வது நகரங்களிலோ, புற நகரங்களிலோ இல்லை கிராமங்களில் தான்" என்று சொன்ன காந்தியடிகள் கிராமங்கள் தன்னிறைவு பெற்றவைகளாகவும் தற்சார்பு பெற்றவைகளாகவும் இருக்க வேண்டும் என்றார்.

**34.** ♦ சுய உதவிக் குழுவின் உறுப்பினர்கள் பொதுவாக ஒரே மாதிரியான பொருளாதார நிலையில் உள்ளவர்கள்.

♦ சுய உதவிக் குழுக்கள் 10 முதல் 20 பெண் உறுப்பினர்களைக் கொண்டவை.

♦ SHGs தமக்கென்று வடிவமைக்கப்பட்டச் சட்டங்களையும், விதிமுறைகளையும் கொண்டுள்ளன.

♦ தொடர்ச்சியாக கூட்டம் நடத்துதல், முறையாகப் பதிவேடுகளைப் பராமரித்தல், சேமித்தல், கடன் வழங்குதல் ஆகிய ஒழுங்கினை அவை கடைபிடிக்கின்றன.

♦ SHG க்கள் முழு பங்கேற்புடன் அனைவரும் கலந்தாலோசித்து முடிவெடுப்பதுடன் தங்களை தாங்களே நிருவகித்துக் கொள்கின்றனர்.

**35.** ♦ பயன்பாடு உளவியல் சார்ந்தது.

♦ பயன்பாடும், உபயோகமும் ஒன்றானவை அல்ல.

♦ பயன்பாடு தனித்தும், சார்ந்தும் இருக்கும்.

♦ பயன்பாடு மனித விருப்பத்தின் தீவிரத்தைச் சார்ந்தது.

♦ பயன்பாடு ஒரு உளவியல் கருத்தாகும்.

♦ பயன்பாடு நீதிநெறி, ஒழுக்க நெறி முக்கியத்துவம் கொண்டதல்ல.

♦ பயன்பாடும் மகிழ்ச்சியும் ஒன்றானவை அல்ல.

**36.** ♦ நிலம் என்பது முதன்மை உற்பத்திக் காரணியாகும்.

♦ நிலம் என்பது இயற்கையின் கொடை.

♦ நிலத்திற்கு உற்பத்திச் செலவு இல்லை.

♦ நிலத்தின் அளிப்பு மாறாதது.

♦ நிலம் நிலையானது அழிவற்றது.

♦ நிலம் என்பது அதன் செழுமையினைப் பொருத்து பல வகைப்படும்.

**37.** **சமநோக்கு வளைகோடுகளின் பண்புகள் :**

♦ சமநோக்கு வளைகோடு கீழ்நோக்கிய சரிவைக் கொண்டது.

♦ சமநோக்கு வளைகோடுகள் தோற்றுவாய் நோக்கி குவிந்து காணப்படும்.

♦ சமநோக்கு வளைகோடு ஒன்றையொன்று வெட்டிக்கொள்ளாது.

♦ சமநோக்கு வளைகோடுகள் X அச்சையோ Y அச்சையோ தொடாது.

**38.** ♦ முற்றுரிமைப் போட்டியில் தனது பண்டத்தை பரவலாக்குவதற்காகவும், புதிய நுகர்வோரைக் கவரும் வண்ணமும், உற்பத்தி செலவுகள் இல்லாமல் விளம்பரச் செலவுகளை மேற்கொள்ளவும் விற்பனைச் செலவு செய்யப்படுகிறது.

♦ விற்பனைச் செலவைப் பற்றி பேராசிரியர் சேம்பர்லின் இலக்கணம் வகுத்துள்ளார்.

♦ விற்பனைச் செலவில் மிக முக்கியமானது விளம்பரச் செலவாகும்.

kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com
enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000

www.surabooks.com
www.Padasalai.Net www.Trb Tnpsc.com


39. ♦ டைட்டானியம், லிக்னைட், மேக்னசைட், கிராபைட் லைம்ஸ்டோன், கிரானைட், பாக்சைட் போன்ற சுரங்கத் திட்டங்கள் தமிழகத்தில் உள்ளன.

♦ நெய்வேலி பழுப்பு நிலக்கரி கழகம் ஒரு முன்னோடி திட்டம் எனலாம்.

♦ இதன் வளர்ச்சியினால் அனல்மின்நிலையம், உரத்தொழிற்சாலை, கார்பன் சார்ந்த தொழில்கள் வளர்ந்து வருகின்றன.

♦ சேலத்தில் மாங்கனிசு சுரங்கமும், ஏற்காட்டில் பாக்சைட் சுரங்கமும், கஞ்சமலையில் இரும்புத்தாது சுரங்கமும் அமைந்துள்ளன.

♦ மாலிப்டினம் எனும் இரசாயனத்தாது இந்தியாவிலேயே மதுரை மாவட்டத்தில் கரடிக்குட்டம் என்னும் ஊரில் மட்டுமே கிடைக்கிறது.

40. **இருமுக முற்றுரிமை (Bilateral Monopoly):** இருமுக முற்றுரிமை எனும் அங்காடியில் ஒரு உற்பத்தியாளர் (முற்றுரிமையாளர்) மற்றும் ஒரு வாங்குபவர் (வாங்கும் முற்றுரிமையாளர்) மட்டும் இருப்பர்.

## பகுதி - IV

41. (அ) சில்லோர் முற்றுரிமை அங்காடியில் சில நிறுவனங்கள் ஒரே மாதிரியான அல்லது வித்தியாசமான பண்டங்களை உற்பத்தி செய்யும்.

**சில்லோர் முற்றுரிமையின் பண்புகள் :**

♦ **சில பெரிய நிறுவனங்கள் :** சில பெரிய நிறுவனங்களே அங்காடி முழுவதிலும் உற்பத்தியையும் தேவையையும் கட்டுப்படுத்தும்.

♦ **நிறுவனங்களுக்குள் சார்ந்திருத்தல் :** ஒரு நிறுவனத்தின் விலையையும் உற்பத்தி அளவையும் நிர்ணயிக்கும் முடிவுகள் போட்டி நிறுவனம் எடுக்கும் முடிவுகளைச் சார்ந்து அமையும்.

♦ **குழுச் செயல்பாடு :** சில்லோர் முற்றுரிமை நிறுவனங்கள் அனைத்தும் தமக்குள் ஒற்றுமையுடன் செயல்பட வேண்டிய முக்கியத்துவத்தை உணர்ந்திருக்கும்.

♦ **விளம்பரச் செலவு :** சில்லோர் முற்றுரிமையாளர், விளம்பரம் அல்லது உற்பத்தியின் தரத்தை மேம்படுத்தி தனது விற்பனையை அதிகரிப்பார்.

♦ **பண்டத்தின் தன்மை :** நிறைவு சில்லோர் முற்றுரிமை என்பது ஒரே விதமான பண்டம் உற்பத்தி செய்வதையும், நிறைகுறை சில்லோர் உற்பத்தி என்பது பலவிதமான பண்டங்கள் உற்பத்தி செய்வதையும் குறிக்கும்.

♦ **மாறாத விலை :** விலையை மாற்றி அமைப்பது என்பது இந்த அங்காடியில் கடினம். சில்லோர் முற்றுரிமையில் விலையை மாற்றாமல் இருப்பதற்கு காரணம் எதிராளிகளின் போட்டி பற்றிய அச்சமாகும்.

**(அல்லது)**

**(ஆ) சுராவின் கையேடு - இயல் - 4 - பகுதி - ஈ வினா எண். 36**

**42. (அ) சுராவின் கையேடு - இயல் - 8 - பகுதி - இ வினா எண். 31**

**(அல்லது)**

**(ஆ) சுராவின் கையேடு - இயல் - 9 - பகுதி - ஈ வினா எண். 37**

**43. (அ) சுராவின் கையேடு - இயல் - 1 - பகுதி - ஈ வினா எண். 36**

**(அல்லது)**

**(ஆ) சுராவின் கையேடு - இயல் - 3 - பகுதி - ஈ வினா எண். 35**

kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com
enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000

www.surabooks.com
www.Padasalai.Net www.Trb Tnpsc.com


**44. (அ) சூராவின் கையேடு - இயல் - 2 - பகுதி - ஈ வினா எண். 38**

**(அல்லது)**

**(ஆ) சூராவின் கையேடு - இயல் - 6 - பகுதி - ஈ வினா எண். 37**

**45. (அ)** பி.ஆர்.அம்பேத்கர் (1891-1956) ஒரு பன்முகத்திறன் பெற்றவர். அவர் இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தை உருவாக்கிய சிற்பி, சமதர்மக் காவலர், சமூக நீதி பாதுகாவலர் மற்றும் அரசின் திட்டங்களை வடிவமைத்தவர். அவருடைய பொருளாதார கருத்துகள் நான்கு தலைப்புகளில் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

- **நிதிப்பொருளாதாரம் :** அம்பேத்கருடைய பெரும்பாலான நூல்கள் அவர் வெளிநாட்டில் தங்கியிருந்த 1913-1923 வரையிலான காலத்தில் எழுதப்பட்டவை. அவர் நிதிப் பொருளாதாரம் குறித்து நிறைய எழுதி இருக்கிறார். மாகாண நிதிப் பெருக்கத்தை மூன்று நிலைகளாகப் பிரிக்கிறார்.

  1. ஒப்படைப்பு வரவு செலவுத் திட்டம் (1871-72 முதல் 1876-77முடிய)
  2. ஒதுக்கீடு வரவு செலவுத் திட்டம் (1877-78 முதல் 1881-82 முடிய) மற்றும்
  3. வருவாய் பங்கீடு வரவு செலவுத் திட்டம் (1882-83 முதல் 1920-1921 முடிய)

- **வேளாண்மைப் பொருளாதாரம் :** 1918ஆம் ஆண்டில் அம்பேத்கர் "இந்தியாவில் குறைந்த நிலவுடமை மற்றும் தீர்வுகள்" என்ற கட்டுரையை எழுதினார். ஆடம்ஸ்மித்தின் 'நாடுகளின் செல்வத்தைப் போல்' நிலவுடைமை ஒருங்கிணைப்பு, நிலவுடைமை விரிவாக்கம் இவற்றிற்கிடையேயான வேறுபாட்டினைக் கூறுகிறார்.

- **சமூக நீதிப் பொருளாதாரம் :** சமூக முன்னேற்றத்திற்கு சாதி மிகப் பெரிய தடையாக இருப்பதாக அம்பேத்கர் நம்பினார். சாதி சமூக பிரிவினைக்கு வழிவகுக்கிறது. தனி மனிதர்கள் தங்களுக்குள் வேலைகளை பரிமாறிக் கொள்ளும் வழி இருக்க வேண்டுமென்று அவர் சொன்னார். மேலும் சாதிய முறை சமூக பதற்றத்திற்குக் காரணமாக அமைகிறது.

- **சமதருமப் பொருளாதாரம் :** அம்பேத்கர் ஒரு சமதருமவாதி; சமூக நீதியின் பாதுகாவலர். அவர் அனைத்து முக்கியமான தொழில்களையும் நாட்டு உடமை ஆக்க வேண்டுமென்றும், நிலத்தை அரசே நிருவகிக்க வேண்டும் என்றும் கூட்டு வேளாண்மை நடத்தப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

**(அல்லது)**

**(ஆ) சூராவின் கையேடு - இயல் - 6 - பகுதி - ஈ வினா எண். 36**

**46. (அ) சூராவின் கையேடு - இயல் - 10 - பகுதி - ஈ வினா எண். 40**

**(அல்லது)**

**(ஆ) சூராவின் கையேடு - இயல் - 11 - பகுதி - ஈ வினா எண். 36**

**47. (அ) சூராவின் கையேடு - இயல் - 12 - பகுதி - இ வினா எண். 28**

**(அல்லது)**

**(ஆ) சூராவின் கையேடு - இயல் - 12 - அரசு தேர்வு வினா விடைகள் (5 மதிப்பெண்கள்) வினா எண். 1**

❖ ❖ ❖

kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com
enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000